


dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com

காலை நாளிதழ்





| Vol: 02 | Issue: 303 | 4 Pages | 29.5.2025 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 303 | 4 பக்கங்கள் | 29.5.2025 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




செல்லிடத்துக்காப்பான்சினங்காப்பான்அல்லிடத்துக் காக்கினென் காவாக்கா லென்

விளக்கம்:

பலிக்கும்இடத்தில்சினம்வராமல்காப்பவனே சினம்காப்பவன்,பலிக்காதஇடத்தில்காத்தால் என்ன, காக்கா விட்டால் என்ன?

## வருமான வரி கணக்கு தாக்கல் செய்ய அவகாசம் நீட்டிப்பு



புதுடெல்லி, மே.29

வருமான வரி தாக்கல் செய்ய செப்டம்பர் 15 ஆம் தேதி வரை அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஜூலை 31 ஆம் தேதியுடன் அவகாசம் முடிவடைய இருந்த நிலையில், அவகாசத்தை நீட்டிக்கப்படுவதாக வருமான வரித்துறை தெரிவித்துள்ளது. ஐடிஆர் படிவங்களில் மேற்கொண்டுள்ள மாற்றங்கள் காரணமாக இந்த கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

வருமான வரி கணக்கு தாக்கல் செய்ய அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது தொடர்பாக விரைவில் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடப்படும் என்றும் வருமான வரித்துறை தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளது. இந்த அறிவிப்பில் கால அவகாசம் நீட்டிப்பு குறித்த விரிவான தகவல்கள் இடம் பெற்று இருக்கும் எனத்தெரிகிறது.

## 18 ஆண்டுகளுக்குப்பின் முதல்முறை; தொடர்ந்து 2 காலாண்டுகளில் லாபம் ஈட்டிய பி.எஸ்.என்.எல்.



மும்பை, மே.29

இந்தியாவின் அரசு தொலைத்தொடர்பு நிறுவனம் பி.எஸ்.என்.எல். ஆகும். இந்நிறுவனம் கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து நஷ்டத்தையே சந்தித்து வந்தது.

ஆனால், செலவு குறைப்பு உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மூலம் பி.எஸ்.என்.எல். லாபம் தரும் நிறுவனமாக மாறியுள்ளது. அதன்படி, அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான 3ம் காலாண்டில் பி.எஸ்.என்.எல். 262 கோடி ரூபாய் லாபம் ஈட்டியது.

இந்நிலையில், 2025 ஜனவரி முதல் மார்ச் வரையிலான 4ம் காலாண்டிலும் பி.எஸ்.என்.எல். நிறுவனம் லாபம் ஈட்டியுள்ளது. அதன்படி, 4ம் காலாண்டில் 280 கோடி ரூபாய் லாபம் ஈட்டியுள்ளது. கடந்த 2024ம் ஆண்டு 4ம் காலாண்டில் பி.எஸ்.என்.எல். 849 கோடி ரூபாய் நஷ்டம் அடைந்திருந்தது.

தற்போது 3 மற்றும் 4ம் காலாண்டுகளில் பி.எஸ்.என்.எல். நிறுவனம் அடுத்தடுத்து லாபம் ஈட்டியுள்ளது. 18 ஆண்டுகளுக்குப்பின் முதல் முறையாக பி.எஸ்.என்.எல். நிறுவனம் தொடர்ந்து 2 காலாண்டுகளில் லாபம் ஈட்டுவது இதுவே முதல் முறையாகும். இதற்குமுன் 2007ம் ஆண்டு 2 காலாண்டுகளில் பி.எஸ்.என்.எல். லாபம் ஈட்டியிருந்தது. தற்போது 18 ஆண்டுகளுக்குப்பின் முதல் முறையாக இரு காலாண்டுகளில் லாபம் ஈட்டப்பட்டுள்ளது.

அடுத்தடுத்து 2 காலாண்டுகளில் லாபம் ஈட்டியபோதும் 2025ம் நிதியாண்டு பி.எஸ்.என்.எல் நிறுவனம் 2 ஆயிரத்து 247 கோடி ரூபாய் நஷ்டத்தையே சந்தித்துள்ளது. ஆனால், இது கடந்த நிதி ஆண்டு நஷ்டத்தை விட பாதி அளவு குறைவாகும். கடந்த 2024ம் நிதியாண்டில் பி.எஸ்.என்.எல். 5 ஆயிரத்து 370 கோடி ரூபாய் நஷ்டத்தை சந்தித்திருந்தது. ஆனால், அந்த நஷ்டம் 2025ம் நிதியாண்டியில் 2 ஆயிரத்து 247 கோடி ரூபாயாக குறைந்துள்ளது. நடப்பு நிதியாண்டியில் பி.எஸ்.என்.எல். நிறுவனத்தை முழுமையான லாபகரமான நிறுவனமாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## போதையில் போலீசை தாக்கிய தாதா; அடுத்து காத்திருந்த அதிர்ச்சி: வைரலாகும் வீடியோ



அமராவதி, மே.29

ஆந்திர பிரதேசத்தில் முதல் மந்திரி சந்திரபாபு நாயுடு தலைமையிலான தெலுங்கு தேச கட்சியின் ஆட்சி நடந்து வருகிறது. இந்நிலையில், கடந்த ஒரு மாதத்திற்கு முன் சிரஞ்சீவி என்ற கான்ஸ்டபிளை அந்த பகுதியை சேர்ந்த தாதா லட்டு என்பவர் மதுபோதையில் தாக்கியுள்ளார். இந்நிலையில், அவரை தேடி வந்த போலீசார், லட்டுவின் கூட்டாளிகளான விக்டர், பாபுலால் மற்றும் ராகேஷ் ஆகிய 3 பேரை கைது செய்தனர்.

அவர்களை பொது வெளியில் வைத்து போலீசார், லத்தியால் அடித்த வீடியோ வைரலாகி வருகிறது. இந்த வீடியோவை ஒய்.எஸ்.ஆர். கட்சியை சேர்ந்த செய்தி தொடர்பாளர் அம்பத்தி ராம்பாபு எக்ஸ் சமூக ஊடகத்தில் பதிவிட்டு உள்ளார்.

அந்த வீடியோவில் போலீஸ்காரர், 3 பேரில் ஒருவரின் காலில் முதலில் மெதுவாக அடித்து பரிசோதிக்கிறார். இதன்பின்னர், அந்த நபரின் கால்களில் ஓங்கி அடிக்கிறார். இதனால், வலியால் அந்த நபர் அலறுகிறார். விடாமல் அவர் தொடர்ந்து அடிக்கும் காட்சிகள் காணப்படுகின்றன. 6 முறை அடித்ததும், வலி பொறுக்க முடியாமல் அந்த நபர் கால்களை பின்னுக்கு இழுக்கிறார்.

போலீசார் சத்தம் போட்டதும் மீண்டும் காலை பழைய நிலைக்கு கொண்டு செல்கிறார். 7வது முறையும் அடி விழுகிறது. அப்போது, மன்னித்து கொள்ளுங்கள் சார் என் அந்த நபர் கெஞ்சுகிறார். ஆனால், அவரை நேராக அமரும்படி கூறி விட்டு, 3 முறை அடிக்கிறார். இதனால் வலியால் அந்த நபர் அழுகிறார். அவரை நகர்ந்து போக கூறிய பின்பு, மற்றொரு நபருக்கு 10 முறை அடி விழுகிறது. அவரும் போலீசிடம் கெஞ்சுகிறார்.

கடைசியாக இருந்த நபரை அடிக்க போலீஸ்காரர் தயாரானபோது, மற்றொரு நபர் புதிய லத்தி ஒன்றை எடுத்து வந்து கொடுக்கிறார். இந்த முறை 3வது நபர் காலை எடுக்காமல் இருப்பதற்காக போலீஸ்காரர் ஒருவர் அந்நபரின் கால்கள் மீது பூட்ஸ் அணிந்த காலால், அந்த வாலிபரின் கால் மீது வைத்து அழுத்தி பிடித்து கொள்கிறார். தொடர்ந்து லத்தியால் அடி விழுகிறது.

கடைசியில் அடியை நிறுத்தி, எழுந்து போக கூறியும் அந்த நபர் எழ முடியாமல் அதே இடத்தில் வலியால் அழுதபடி வீடியோவில் காணப்படுகிறார். பொதுவெளியில் 3 பேரை போலீசார் லத்தியால் அடிக்கும் வீடியோ வைரலாகி வருகிறது.

இதுபற்றி ராம்பாபு வெளியிட்ட செய்தியில், நீங்கள் தவறு செய்திருந்தபோதும் கூட, உங்களை அடிக்கும் உரிமை அவர்களுக்கு கிடையாது. குடிமக்களின் உரிமைகள் இல்லாத பாபுவின் ஆட்சியிது. நீதிக்காக போராட செல்வோம் என்று அந்த பதிவில் தெரிவித்து உள்ளார்.

# டெல்லிக்கு காவி, வெள்ளைக்கொடி ஏந்திச் செல்லவில்லை எடப்பாடி பழனிசாமிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மீண்டும் பதிலடி

சென்னை, மே.29

''டெல்லி பயணம் குறித்து எடப்பாடி பழனிசாமி தேவையற்ற விமர்சனம் செய்கிறார். திமுக ஆட்சி பற்றி குறை சொல்வதற்கு எதுவும் இல்லாததால், அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்கிறார். டெல்லிக்கு காவிக் கொடியையையும் ஏந்திச் செல்லவில்லை, வெள்ளைக்கொடியுடனும் செல்லவில்லை. எடப்பாடிக்கு பதில் கூறி என் தரத்தை தாழ்த்திக்கொள்ள விரும்பவில்லை'' என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று கொளத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத் துறை சார்பில் ரூ.22.61 கோடி மதிப்பீட்டில் மூன்று மூத்த குடிமக்கள் உறைவிடங்கள் கட்டுமான பணிக்கு அடிக்கல் நாட்டி, ரூ.4.36 கோடி செலவில் மேம்படுத்தப் பட்ட ஜெனரல் குமாரமங்கலம் குளம் மற்றும் பூங்கா, ரூ.91.36 கோடி செலவில் மேம்படுத்தப்பட்ட தணிகாச்சலம் நகர் கால்வாய் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

மேலும், கொளத்தூர் பகுதியைச் சேர்ந்த 10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள், 150 மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப் பட்ட ஸ்கூட்டர்கள், அனிதா

அச்சீவர்ஸ் அகாடமி மாணவ, மாணவியர்களுக்கு தையல் இயந்திரங்கள் மற்றும் மடிக்கணினிகளையும், பயனாளிகளுக்கு கண்ணாடிகளையும் வழங்கினார். பின்னர் அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: தமிழக அரசு மீது எதிர்க்கட்சி தலைவர் தொடர்ந்து குற்றச்சாட்டு கூறி வருகிறாரா? திமுக ஆட்சி பற்றி குறை சொல்வதற்கு எதுவும் எடப்பாடி பழனிசாமிக்கு கிடைக்கவில்லை.

எனது டெல்லி பயணம் குறித்து திரும்பதிரும்ப அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்கிறார். எடப்பாடிக்கு பதில் கூறி என் தரத்தை தாழ்த்திக்கொள்ள விரும்பவில்லை.

டெல்லி பயணம் குறித்து விமர்சனம் வைத்துள்ளாரே எடப்பாடி?



வெள்ளைக்கொடி எடுத்துக் கொண்டு செல்வதாக எடப்பாடி கூறினார். வெள்ளைக் கொடி எடுத்துக் கொண்டும் நான் போகவில்லை, காவி கொடியுடனும் போகவில்லை என்று தெளிவாக நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன். மக்கள் தங்களை தாங்களை காத்துக்கொள்ள வேண்டும் என்று நேற்றுகூட எடப்பாடி கூறி உள்ளாரே? அதிமுக ஆட்சியில்

இருந்தபோது கொள்ளையடித்த ஆட்சி. ஏற்கனவே சாத்தான்குளம், தூத்துக்குடி, பொள்ளாச்சி இப்படி பல சம்பவங்கள் இருக்கிறது. அதெல்லாம் எடுத்துச்சொல்ல நேரம் போதாது. இதெல்லாம் வீம்புக்காக பண்ணிக் கொண்டிருக்கிறார். அதற்கு சில மீடியாக்களும் இரையாகி, அந்த செய்திகளை திரும்ப திரும்ப போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

## தாராபுரத்தில் ரூ. 5கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தும், புதிய திட்ட பணிகளை அமைச்சர்கள் தொடங்கியும் வைத்தனர்

தாராபுரத்தில் செய்தித் துறை அமைச்சர் சாமிநாதன் மற்றும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் கயல்விழி ஆகியோர்.5கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தும். புதிய திட்ட பணிகளை தொடங்கியும் வைத்தனர்.

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.108 கோடி மதிப்பீட்டில் பள்ளி உட்டகட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் முடிவுற்ற திட்டப் பணிகளை செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன். மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் கயல்விழி ஆகியோர்.திறந்து வைத்து, வைத்தனர். அதன் பிறகு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.3.58 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளை துவக்கி வைத்தார்கள்.





செய்தித்துறை அமைச்சர் சாமிநாதன் தெரிவித்ததாவது,

தாராபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் பல்வேறு புதிய திட்டப்பணிகளை துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

அதில் திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வளையற்கார நகராட்சி நடுநிலைப் பள்ளியில் பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.32, இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைக்கட்டடங்கள்.ரூ.40. இலட்சம் மதிப்பீட்டில் சித்ராவுத்தன்பாளையம் நகராட்சி நடுநிலைப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், ரூ.36.28 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்9. சூளைமேட்டில் கட்டப்பட்டுள்ள பொது கழிப்பிடத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து. நகர்ப்புற சாலை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.2.08 கோடி மதிப்பீட்டில் தார்சாலைகளை புதுப்பிக்கும் பணி மற்றும் ரூ.1. கோடியே 50 லட்சம் மதிப்பீட்டில் புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணி என மொத்தம் ரூ.4.66 கோடி மதிப்பீட்டில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன என இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், தாராபுரம் நகர் மன்றத்தலைவர் .பாப்புக்கண்ணன், தாராபுரம் நகராட்சி ஆணையாளர் .சரவணக்குமார், நகராட்சி பொறியாளர் சுமதி, நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் துறை சாரந்த அலுவலர்கள் கலந்து பலர் கலந்து கொண்டனர்.

## அண்ணா பல்கலை. மாணவி பாலியல் வழக்கு ஞானசேகரன் குற்றவாளி என தீர்ப்பு; ஜுன் 2-ம் தேதி தண்டனை அறிவிப்பதாக மகளிர் நீதிமன்றம் அறிவிப்பு

சென்னை, மே.29

சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வழக்கில் கைதான ஞானசேகரன் மீது சுமத்தப்பட்ட 12 குற்றச்சாட்டுகளில், 11 குற்றச்சாட்டுகள் நிரூபணமாகி உள்ளதாக சென்னை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளது. அண்ணா பல்கலை., மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் கைது செய்யப்பட்ட ஞானசேகரன் குற்றவாளி எனத் தீர்ப்பு வழங்கப்பட்டு உள்ளது.

மாணவி புகாரளித்து ஐந்தே மாதங்களில் விசாரணை முடிக்கப்பட்ட நிலையில், சென்னை மகளிர் நீதிமன்ற நீதிபதி ராஜலட்சுமி தீர்ப்பு வழங்கினார். குற்றவாளி ஞானசேகரனுக்கு எந்த ஒரு இரக்கம், கருணை காட்டாமல் அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என மகளிர் நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வலியுறுத்தி உள்ளது. எனக்கு வயதான, உடல்நலன் சரி இல்லாத தாயார் உள்ளார். அப்பா இல்லை. குடும்ப சூழலை கருத்தில் கொண்டு குறைந்தபட்ச தண்டனை வழங்க வேண்டும் என ஞானசேகரன் கோரிக்கை வைத்துள்ளார். ஆனால் அதை ஏற்றுக்கொள்ள கூடாது என்று தமிழ்நாடு அரசு கோரிக்கை வைத்துள்ளது.

அண்ணா பல்கலைக் கழக மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றவாளி என தீர்ப்பு வழங்கப்பட்ட பிறகு மகளிர் நீதிமன்றத்தில் இருந்து மீண்டும் புழல் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்ட ஞானசேகரன். தண்டனை விவரம் ஜூன் 2ம் தேதி வெளியாகிறது என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

11 குற்றச்சாட்டுகளிலும் ஞானசேகரன் குற்றவாளி என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. குற்றவாளி ஞானசேகரனுக்கு எந்த ஒரு இரக்கம், கருணை காட்டாமல் அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளோம் என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் அரசு சிறப்பு வழக்கறிஞர் மேரி ஜெயந்தி பேட்டி அளித்துள்ளார்.

வழக்கின் தொடக்கத்தில் ஞானசேகரன் மீது 4 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. ஏற்கனவே 4 பிரிவுகளில் அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்ட நிலையில் மேலும் 4 பிரிவுகள் பின்னர் சேர்க்கப்பட்டன. அதன்பின் மீண்டும் 4 பிரிவுகளில் வழக்குகள் பதியப்பட்டன. இப்படி மொத்தமாக 12 பிரிவுகள் கீழ் வழக்கு போடப்பட்டது. அதன்பின்னர் கடந்த பிப்ரவரி 24 அன்று சைதாப்பேட்டை 9வது குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.



குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து 3 மாதங்களில் வழக்கே முடிந்துவிட்டது. ஞானசேகரனுக்கு எதிராக 100 பக்க குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இதில் 12 பிரிவுகள் குறிப்பிடப்பட்டு. சட்ட விரோதமாக ஒருவரை தடுத்து வைத்தல், பெண்களுக்கு எதிரான வன்கொடுமை மிரட்டி நிர்வாணப் படுத்துதல் தொழில்நுட்ப சட்டம் ஆதாரங்களை அழித்தல் கல்லூரி மாணவியை சட்டவிரோதமாக கட்டுப்பாட்டில் வைத்திருப்பது புகைப்படம் எடுத்து வெளியிடல் பாலியல் வன்கொடுமையில் ஈடுபடல் போன்ற குற்றங்களின் கீழ் வழக்குகள் பதியப்பட்டு. இதில்தான் 11 பிரிவுகளின் கீழ் குற்றம் நிரூபணம் ஆகி உள்ளது. அதனுடைய தண்டனை விவரங்கள் ஜூன் 2ம் தேதி வெளியாகிறது என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. இந்த வழக்கில் 12 பிரிவுகளும் கடுமையான சென்சிடிவ் பிரிவுகள் ஆகும், இந்த பிரிவுகளை போலீசார் பதிவு செய்தது ஞானசேகரனுக்கு எதிராக திரும்பியது. இதனால் அவருக்கு அதிக அளவில் தண்டனை கிடைக்கவும் வாய்ப்புகள் உள்ளன. ஞானசேகரன் மீது கடந்த 2013 ஆம் ஆண்டிலிருந்து 20 வழக்குகள் உள்ளது. எல்லா வழக்குகளும் திருட்டு சம்பந்தமான வழக்குகள். பெண்களை துன்புறுத்தியதாகவோ, ரவுடியிசம் செய்ததாகவோ வழக்கு எதுவும் இதற்கு இல்லை. இதுவரை பெண்கள் இந்த நபரால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்கிற புகார் இதற்கு முன்பு வரவில்லை. இப்படிப்பட்ட நிலையில்தான் இந்த முறை பாலியல் வன்கொடுமை வழக்கில் அவர் தண்டிக்கப்பட்டு உள்ளார்.



தினகனி



# நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கொட்டுது மழை; பெரியாறு அணை நீர்மட்டம் 4 நாள்களில் 4 அடி உயர்வு: 5 மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி



கூடலூர், மே.29

நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கனமழையால் முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் 4 நாள்களில் 4 அடி உயர்ந்துள்ளது. இதனால், 5 மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். முல்லைப்பெரியாறு அணைமூலம் தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்கள் குடிநீர் மற்றும் பாசன வசதி பெறுகின்றன. இந்தாண்டு கேரளாவில் தென்மேற்கு பருவமழை முன்னதாக தொடங்கிய நிலையில், முல்லைப்பெரியாறு அணை அமைந்துள்ள இடுக்கி மாவட்டத்தில் மழை வெளுத்துக் கட்டி வருகிறது.

குறிப்பாக பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்பு பகுதி மற்றும் தேக்கடி பகுதிகளில் கடந்த 4 நாட்களில் 50 செ.மீ வரை மழை கொட்டித் தீர்த்துள்ளது. கடந்த மே 23ம் தேதி முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் 114 அடியாகவும், நீர்வரத்து 100 கனஅடியாகவும், நீர்இருப்பு 1634.875 மில்லியன் கனஅடியாகவும் இருந்தது.


இந்நிலையில், தொடர் மழை காரணமாக கடந்த 2 நாட்களாக அணைக்கு நீர்வரத்து கிடுகிடுவென உயர்ந்துள்ளது. இன்று காலை நிலவரப்படி அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 5,205.10 கனஅடியாக உயர்ந்துள்ளது. 4 நாட்களுக்கு முன் 114 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் இன்று காலை 118.40 அடியாக உள்ளது. தற்போது அணையின் நீர் இருப்பு 2,285.10 மில்லியன் கனஅடி. நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், அணைக்கு நீர்வரத்தும், நீர்மட்டமும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், 5 மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஆண்டிபட்டி அருகே, 71 அடி உயரமுள்ள வைகை அணையின் நீர்மட்டம் 52.99 அடி. நீர்வரத்து வினாடிக்கு 426 கனஅடி. நீர்திறப்பு 72 கனஅடி. நீர்இருப்பு 2,409 மில்லியன் கனஅடி.

57 அடி உயரமுள்ள மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 39.60 அடி. அணைக்கு நீர்வரத்து 15 கனஅடி. நீர் வெளியேற்றம் இல்லை. நீர் இருப்பு 180.13 மில்லியன் கன அடி. 126.28 அடி உயரமுள்ள சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் 93.97 அடி. நீர்வரத்து 3 கனஅடி. நீர் திறப்பு 3 கனஅடி. நீர்இருப்பு 56.63 மில்லியன்கனஅடி. 52.55 அடி உயரமுள்ள சண்முகநதி அணையின் நீர்மட்டம் 43.50 அடி. நீர்வரத்து 9 கனஅடி. நீர் வெளியேற்றம் இல்லை. நீர் இருப்பு 52.77 மில்லியன் கனஅடி.

தேனி மாவட்டம், கடமலைமயிலை ஒன்றியம், மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள வெள்ளிமலை வனப்பகுதியில் மூலவைகை ஆறு உருவாகிறது. மேலும் மலையில் இருந்து சிற்றோடையாக வரும் தண்ணீர் மற்றும் அரசரடி, பொம்மராஜபுரம், நொச்சி ஓடை, ஐந்தரைப்புலி, காந்தி கிராமம் உள்ளிட்ட பகுதிகளில் பெய்யும் மழை நீர் ஆகியவை ஒன்றுசேர்ந்து மூலவைகை ஆறாக கண்டமனூர், குன்னூர் வழியாக ஆண்டிபட்டி அருகே உள்ள வைகை அணையை சென்றடைகிறது. இந்த நிலையில் நீர்பிடிப்புப் பகுதிகளில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால் தற்போது மூலவைகையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் வைகை அணைக்கு நீர்வரத்து அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

# வங்கக் கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவானது: பல இடங்களில் கனமழை பெய்யும்



சென்னை, மே.29

வங்கக் கடலில் ஒடிசா கடலோரப் பகுதிகளை ஒட்டிய கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளது. மேலும், தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளி மண்டல மேலடுக்கு சுழற்சியும் நிலை கொண்டுள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் 30ம் தேதி வரை கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென்னிந்தியப் பகுதிகளில் கிழக்கு, மேற்கு மற்றும் வட மேற்கு திசைக் காற்றுகளின் இணைவு காரணமாக கடந்த 4 நாட்களாக கனமழை பெய்து வருகிறது.

நீலகிரி, கோவை, ஈரோடு, திருப்பூர், தென்காசி, தேனி, திண்டுக்கல், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களில் கனமழை பெய்துள்ளது. ஒரு சில இடங்களில் அதிகனமழையும் பெய்துள்ளது. குறிப்பாக நீலகிரி மாவட்டத்தில் அனேக இடங்களில் கன முதல் மிக கனமழையும், ஓரிரு இடங்களில் அதி கனமழையும் பெய்துள்ளது. கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகளில் ஒரு சில இடங்களில் கன முதல் மிக கனமழையும் ஓரிரு இடங்களில் அதி கனமழையும் பெய்துள்ளது.

இந்நிலையில், சென்னை, நீலகிரி, கடலூர், ஈரோடு, நாகப்பட்டினம், திருநெல்வேலி, சேலம், திருவள்ளூர், கோவை, வேலூர், மாவட்டங்களில் இயல்பைவிட 3 டிகிரி செல்சியஸ் முதல் 5 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை குறைந்துள்ளது. அத்துடன், கோவை, தர்மபுரி, திண்டுக்கல், மதுரை, திருப்பத்தூர், திருச்சி, நீலகிரி(ஊட்டி) மாவட்டங்களில் இயல்பைவிட 5 டிகிரிக்கும் கீழே வெப்பநிலை குறைந்துள்ளது. நேற்றைய நிலவரப்படி தமிழகத்தில் நேற்று, கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், நீலகிரி மாவட்டத்தில் ஒருசில இடங்களில் கனமுதல் அதிகனமழையும், திருநெல்வேலி மாவட்டத்தின் மலைப் பகுதிகள், தேனி மற்றும் தென்காசி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், திருப்பூர், திண்டுக்கல், கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்துள்ளது. இதற்கிடையே, ஒடிசா கடலோரப் பகுதிகளை ஒட்டிய வடமேற்கு வங்கக் கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வுப் பகுதி நேற்று உருவானது. இது வடக்கு நோக்கிநகர்ந்து மேலும் வலுவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன், தென்னிந்திய பகுதிகளின்மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சியும் நிலை கொண்டுள்ளதால், தமிழகத்தில் இன்று, கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், நீலகிரி மாவட்டத்தில் ஒரு சில இடங்களில் கனமழை முதல் மிக கனமழையும், திருநெல்வேலி மாவட்டத்தின் மலைப் பகுதிகள், திருப்பூர், திண்டுக்கல், தேனி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யும்.

இதே நிலை 30ம் தேதி வரை நீடிக்கும். சென்னையில் நேற்று பெரும்பாலான இடங்களில் மாலையில் மழை பெய்தது. திருவள்ளூர் மாவட்டத்திலும் பெரும்பாலான இடங்களில் மழை பெய்தது. இன்றும் பொதுவாக மேகமூட்டம் காணப்படும். நகரின் சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யும்.

# குமரியில் கனமழைக்கு மேலும் 18 வீடுகள் சேதம்: அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு



நாகர்கோவில், மே.29

குமரி மாவட்டத்தில் கனமழை தொடர்ந்து பெய்து வரும் நிலையில் மேலும் 18 வீடுகள் சேதம் அடைந்துள்ளன. குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. தென்மேற்கு பருவமழை தீவிரமடையும்என்றுவானிலை ஆய்வுமையம்கூறியிருந்த நிலையில் அரபிக்கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக மாவட்டத்தில் தொடர்ந்து மழை காணப்படுகிறது. சூறைக்காற்றுடன் பெய்த மழையின் காரணமாக மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்து பாதிப்புகள் ஏற்பட்டன. மாவட்டத்தில் வீடுகளும் சுவர்கள் இடிந்து விழுந்துள்ளன. மின் கம்பங்கள் முறிந்ததால் பல இடங்களிலும் தொடர்ந்து மின்தடைகள் ஏற்பட்டு வருகிறது. மாவட்டத்தில் இன்றும் காலை முதல் வானம் மேகமூட்டத்துடன் காணப்படுவதும் தொடர்ந்து சாரல் மழை பெய்வதுமாக இருந்து வருகிறது.

மாவட்டத்தில் இன்று காலை வரை அதிகபட்சமாக அடையாமடையில் 78.2 மி.மீ மழை பெய்திருந்தது. மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வரும் நிலையில் மேலும் 17 வீடுகள் பகுதியளவும், ஒரு வீடு முழுமையாகவும் சேதம் அடைந்துள்ளது. இதுவரை மொத்தம் 40 வீடுகள் இடிந்து விழுந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். மாவட்டத்தில் இன்று காலை நிலவரப்படி பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 37.87 அடியாகும். அணைக்கு 1397 கன அடி தண்ணீர் வரத்து காணப்பட்டது. பெருஞ்சாணி நீர்மட்டம் 42.55 அடியாகும். அணைக்கு 1081 கன அடி தண்ணீர் வரத்து காணப்பட்டது. 22 கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டிருந்தது. சிற்றார்1ல் 5.58 அடியாக நீர்மட்டம் உள்ளது. அணைக்கு 185 கன அடி தண்ணீர் வரத்து காணப்பட்டது. சிற்றார்2ல் 5.67 அடியாக நீர்மட்டம் உள்ளது.

அணைக்கு 295 கன அடி தண்ணீர் வந்து பத்துகாணியில் 7 மரங்கள் சாய்ந்தன

அருமனை: பத்துகாணி பகுதியில் நேற்று இரவு பலத்த காற்றுடன் மழை பெய்தது. இதனால் பத்து காணி ஆரம்ப சுகாதார நிலையம் செல்லும் வழியில் ராட்சத மரக்கிளைகள் மின்கம்பிகள் மீது விழுந்தது. அதேபோல் சுகாதார நிலையத்தில் இருந்து சற்று தொலைவில் ரப்பர் மரம் முறிந்து மின்கம்பம் மீது விழுந்ததால் மின்கம்பம் 2 ஆக உடைந்தது. மேலேகற்றுவா பழங்குடியினர் வசிக்கும் பகுதியில் பெரிய பலா மரம், கொண்டகட்டி பகுதியில் இரண்டு கிராம்பு மரங்கள் விழுந்து மின்கம்பிகள் சேதமடைந்தது. முல்லப்பூகாணி பகுதியிலும், கற்றுவா பகுதியிலும் வீடுகள் மீது மரம் விழுந்து சேதமடைந்தது. சானல்கரை பகுதியில் மின்சார கம்பிகள் மீது ரப்பர் மரம் விழுந்தது. மரங்கள் விழுந்ததால் பத்துகாணி சுற்றுவட்டார பகுதிகளில் பல இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. சில இடங்களில் மின் ஊழியர்கள் வராததால் பொதுமக்களே இணைந்து மரக்கிளைகளை வெட்டி அப்புறப்படுத்தினர். மருதம்பாறை மற்றும் சில இடங்களில் மின் ஊழியர்கள்அறுந்தமின்கம்பிகளை சரிசெய்ததால் மின் வினியோகம் தற்போது துவங்கியுள்ளது. ஆனால் ஒரு இடத்தில் சரி செய்தால் மற்றொரு இடத்தில் மரம் விழுந்து மின்கம்பிகளை துண்டித்து விடுவதால் மின்ஊழியர்கள் திணறி வருகின்றனர்.

# பள்ளி திறப்பு - வார விடுமுறையையொட்டி 2,510 சிறப்பு பஸ்கள் இயக்கம்: 25,946 பேர் முன்பதிவு: போக்குவரத்து துறை தகவல்



சென்னை, மே.29

கோடை விடுமுறைக்கு பின் பள்ளி திறப்பு மற்றும் வார விடுமுறையையொட்டி 2,510 சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளதாக போக்குவரத்து துறை அறிவித்துள்ளது. மேலும், 25,946 பேர் முன்பதிவு செய்துள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளன. இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: கோடை விடுமுறை முடிந்து பள்ளி திறப்பு மற்றும் வார விடுமுறை நாட்களை முன்னிட்டு வரும், வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுகிழமைகளில் சென்னையிலிருந்தும் இதர இடங்களுக்கும் மற்றும் பிற இடங்களிலிருந்தும் கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்கள் தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு 30ம் தேதி (வெள்ளி) 570 பேருந்துகளும் 31ம் தேதி (சனி) 605 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அதேபோல், சென்னை கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூர். பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 30ம் தேதி (வெள்ளி) 100 பேருந்துகளும், 31ம் தேதி (சனி) 90 பேருந்துகளும் மேற்கூறிய இடங்களிலிருந்தும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது மற்றும் பெங்களூர், திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலிருந்தும் பல்வேறு இடங்களுக்கும் 250 சிறப்பு பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதுமட்டுமின்றி, மாதாவரத்திலிருந்து 30ம் தேதி 24 பேருந்துகளும், 31ம் தேதி 24 பேருந்துகளும் சிறப்பு பேருந்துகளாக இயக்கப்படுகிறது.

மேலும், ஜூன் 1ம் தேதியான திங்கள் அன்று சொந்த ஊர்களில் இருந்து சென்னை, பெங்களூர் மற்றும் பல்வேறு இடங்களுக்கு திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களிலிருந்தும் 850 சிறப்பு பேருந்துகள் இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்த வார இறுதியில் வெள்ளிக்கிழமை 8,119 பயணிகளும், சனிக்கிழமை 7,304 பயணிகளும் மற்றும்ஞாயிறு 10,523 பயணிகளும் பயணம் மேற்கொள்ள முன்பதிவு செய்துள்ளனர்.

இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கவாய்ப்பு உள்ளதால் தொலைதூர பயணம் மேற்கொள்ள இருக்கும் பயணிகள் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு தங்களது பயணத்திற்கு www.tnstc.in மற்றும் மொபைல் ஆப் மூலம் முன்பதிவு செய்து பயணிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது. இச்சிறப்பு பேருந்து இயக்கத்தினை கண்காணிக்க அனைத்து பேருந்து நிலையங்களிலும் போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே, பயணிகள் இந்த வசதியினை பயன்படுத்தி தங்களது பயணத்தினை மேற்கொள்ள இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விசாரணை கைதி உயிரிழப்பு : போலீசாருக்கு ரூ. 10 லட்சம் அபராதம்

சேலம் மாவட்டம், கருமலை கூடல் கிராமத்தில் 2015ம் ஆண்டு நடந்த பழனிச்சாமி என்பவர் கொலை வழக்கில், அதேகிராமத்தைச் சேர்ந்த கோகுல கண்ணன் என்பவரை கருமலைக்கூடல் போலீசார் பிடித்து விசாரித்தனர். அப்போது, உதவி ஆய்வாளர்கள் ஹரிஹரன், கீர்த்திவாசன், வேணுகோபால் மற்றும் 4 போலீசார் அவரை அடித்து விசாரித்துள்ளனர். இதில் நெஞ்சுவலி ஏற்பட்டு கோகுல கண்ணன் மயங்கி விழுந்தார். அவரை ஆஸ்பத்திரிக்கு கொண்டுச் சென்றபோது, அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக டாக்டர்கள் கூறினர். இந்த சம்பவம் குறித்து வெளியான செய்திகளின் அடிப்படையில், மாநில மனித உரிமை ஆணையம் தாமாக முன் வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்தது. இந்த வழக்கை விசாரித்த மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினர் கண்ணதாசன் பிறப்பித்த உத்தரவில், "வழக்கு தொடர்பான ஆவணங்கள் அறிக்கைகளை பரிசீலித்ததில், போலீஸ் நிலையத்தில் தாக்கப்பட்டதால்தான் கோகுல கண்ணன் மரணம் அடைந்துள்ளார் என்பது தெளிவாகுகிறது. எனவே, கோகுல கண்ணன் குடும்பத்துக்கு ரூ.10 லட்சத்தை ஒரு மாதத்துக்குள் அரசு வழங்கவேண்டும். இந்த இழப்பீட்டு தொகையை, சப்இன்ஸ்பெக்டர்கள் ஹரிஹரன், கீர்த்திவாசன், வேணுகோபால் ஆகியோரிடம் இருந்து தலா ரூ.2 லட்சமும், தலா ரூ.1.50 லட்சத்தை 3 போலீஸ்காரர்களிடம் இருந்தும் வசூலிக்க வேண்டும். இந்த 7 பேர் மீதும் துறை ரீதியான விசாரணை நடத்தி, தகுந்த முடிவை 3 மாதங்களுக்குள் எடுக்கவேண்டும்" என்று கூறியுள்ளார்.

# காதல் திருமணம் செய்த கணவரை சேர்த்து வைக்கக்கோரி சிவகங்கை எஸ்பி அலுவலகத்தில் கோவை இளம்பெண் தர்ணா



சிவகங்கை, மே.29

காதல் திருமணம் செய்த கணவரை சேர்த்து வைக்கக்கோரி, சிவகங்கை எஸ்பி அலுவலகத்தில் கோவை இளம்பெண் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. சிவகங்கை மாவட்டம், மானாமதுரையைச் சேர்ந்தவர் குகன் (25). இவர், கோவையில் உள்ள கல்லூரியில் படித்த போது, அதே கல்லூரியில் படித்த ஷாமிலி (25) என்பவரை காதலித்ததாக கூறப்படுகிறது. படிப்பு முடிந்த நிலையில் குகன் தற்போது சிங்கப்பூர் நாட்டில் வேலை பார்த்து வருகிறார். கடந்த மாதம் சொந்த ஊர் திரும்பிய குகன், கோவைக்கு சென்று ஷாமிலியை திருமணம் செய்து கொண்டதாக கூறப்படுகிறது. அதன் பின்னர் மானாமதுரை திரும்பியவர் ஷாமிலியுடன் தொடர்பை துண்டித்துள்ளார்.

இந்நிலையில், தனது காதல் கணவரை தேடி ஷாமிலி மானாமதுரை வந்தார். ஆனால், அவரால் குகனை தொடர்புகொள்ள முடியவில்லை. இது குறித்து மானாமதுரை அனைத்துமகளிர்போலீஸ் ஸ்டேசனில் புகார் அளித்தார். இந்நிலையில், ஷாமிலி நேற்று சிவகங்கை மாவட்ட எஸ்பி அலுவலகத்திற்கு வந்தார். அங்கு திடீரென தரையில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டார். தனது புகார் தொடர்பாக மானாமதுரை மகளிர் போலீசார் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், காதல் கணவருடன் தன்னை சேர்த்து வைக்க வேண்டும் என்றும் கூறினார். இளம்பெண்ணின் திடீர் போராட்டத்தால் எஸ்பி அலுவலக வளாகத்தில் பரபரப்பு ஏற்பட்டது. அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த பெண் போலீசார், ஷாமிலியை சமாதானம் செய்து விசாரணைக்கு அழைத்துச் சென்றனர்.

# 11 வகை சீர் வரிசையுடன் வளர்ப்பு நாய்க்கு வளைகாப்பு விழா



சென்னை, மே.29

தங்களுக்கு மகள் இல்லாத ஏக்கத்தில் வளர்ப்பு நாய்க்கு 11 வகை சீர்வரிசையுடன் வளைகாப்பு நடத்தி வயதான தம்பதி அசத்தினர். கல்பாக்கம் அடுத்த கூவத்தூர் பகுதியை சேர்ந்தவர் பரணி (62). இவரது மனைவி குமாரி (58). இவர்களுக்கு காமேஷ், சிபிராஜன் என்ற 2 மகன்கள் உள்ளனர். எனினும் மகள் இல்லாததால் ஏக்கத்தில் இருந்து வந்தனர். இந்நிலையில், இந்த தம்பதி, 'ரியா' என்ற பெண் நாயை பாசமுடன் வளர்த்து வருகின்றனர். பரணியும், குமாரியும் அந்த வளர்ப்பு நாய் மீது அளவற்ற பாசம் வைத்துள்ளனர். குடும்பத்தில் உள்ள அனைவரிடம் இணை பிரியா நட்புடன் பழகி பாசமுடன் வளர்ந்து வந்ததால் அந்த நாய் மீது தம்பதி குடும்பத்தினர் அளவில்லா அன்பு காட்டுகின்றனர். இந்நிலையில், தற்போது நிறை மாத கர்ப்பிணியான தங்கள் பாச நாய்க்கு வளைகாப்பு விழா நடத்தி மகிழ அவர்கள் ஆசைப்பட்டனர்.

வளைகாப்புக்கான நாள் குறிக்கப்பட்டு, தங்கள் உறவினர்கள், நண்பர்களுக்கு விழாவில் பங்கேற்க அழைப்பு விடுத்தனர். நேற்று பஞ்சு மெத்தையில் அமர வைக்கப்பட்ட நாய்க்கு, ஊரே வியந்து பார்க்கும் வகையில் பட்டுப்புடவை கட்டி, கண்ணாடி வளையல் மாட்டி, மாலை அணிவித்து, நெக்லஸ் அணிவித்து பெண்கள் நலங்கு வைத்தனர். பின்னர் ஆரத்தி எடுத்தனர். அப்போது நலங்கு வைத்த பெண்களுக்கு வெத்தலை, பாக்கு பழத்துடன் தாம்பூலம் வழங்கப்பட்டது. கர்ப்பிணி நாய் முன்பு பழம், இனிப்பு, கார வகைகள், பெடிகிரி, பிஸ்கட் அடங்கிய 11 வகை சீர் வரிசை தட்டுகள் வைத்து வளைகாப்பு விழா இனிதே நடந்தேறியது. முன்னதாக குமாரியின் தம்பி கார்த்திக் என்பவர் நாய்க்கு மலர் மாலை அணிவித்து தாய்மாமன் முறை சடங்கு செய்தார்.

சந்தனத்தில் நலங்கு வைத்து சடங்கு முடித்தவுடன் கர்ப்பிணி நாய்க்கு பிஸ்கட், பிரியாணி வழங்கப்பட்டது. பிறகு வளைகாப்பு நிகழ்ச்சிக்கு வந்த நண்பர்கள், உறவினர்களுக்கு நாயின் உரிமையாளர் பரணி தம்பதியினர் பிரியாணி விருந்து வழங்கி உபசரித்தார். பெண் பிள்ளை இருந்தால் திருமணம் செய்து வளைகாப்பு நடத்தி இருப்போம் என்றும், அந்த குறையை போக்கும் வகையில் வளர்ப்புநாய் ரியாவை பெண்பிள்ளையாக பாவித்து தாங்கள் வளைகாப்பு விழா நடத்தி மகிழ்ந்ததாக பரணி குமாரி நெகிழ்ச்சியோடு தெரிவித்தனர்.

# மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா ஜம்மு-காஷ்மீர் செல்கிறார்

டெல்லி, மே.29

மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா இரு நாள்கள் அரசுமுறைப் பயணமாக ஜம்மு காஷ்மீருக்குச் செல்லவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மே 29ஆம் தேதி ஜம்மு காஷ்மீருக்குச் செல்லும் அவர், இரு நாள்கள் ஜம்மு பிரிவில் உள்ளப் பகுதிகளைப் பார்வையிடவுள்ளார்.

இதோடு மட்டுமின்றி, சமீபத்தில் பாகிஸ்தான் நடத்திய ஷெல் தாக்குதலில் பாதிக்கப்பட்ட பூஞ்ச் எல்லைப் பகுதியையொட்டியுள்ள குடும்பங்களைச் சந்திக்க திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

பகல்காமில் பயங்கரவாதிகள் தாக்குதலுக்கு ஆபரேஷன் சிந்தூர் மூலம் இந்தியா பதிலடி கொடுத்தப் பிறகு முதல் முறையாக ஜம்மு காஷ்மீருக்கு அமித்ஷா செல்லவுள்ளார்.

பகல்காம் தாக்குதலின்போது அனந்த்நாக் மாவட்டத்துக்குச் சென்ற அமித் ஷா, தாக்குதல் நடைபெற்ற பைசாரன் பள்ளத்தாக்கில் நேரில் சென்று பார்வையிட்டார்.

# நீதிமன்ற உத்தரவுகளை தவறாமல் செயலாளர்கள், அதிகாரிகள் சரியாக பின்பற்ற வேண்டும்: தமிழக அரசு அறிவுறுத்தல்




சென்னை, மே.29

சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் மதுரை கிளை அமர்வில் பிறப்பிக்கப்படும் உத்தரவுகளை குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் நிறைவேற்றாத அரசு அதிகாரிகள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்வது நடந்தேறி வருகின்றன. குறிப்பாக பொதுமக்கள் சார்ந்து துறைகள் மீது அதிகளவில் அவமதிப்பு வழக்குகள் பதியப்படுகின்றன. அண்மையில் உயர்நீதிமன்றத்தால் மூத்த ஐஏஎஸ் அதிகாரி ஒருவருக்கு சிறைதண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்பட்டது.

இது போன்ற நிகழ்வுகளை தவிர்க்கும் விதமாக அனைத்து துறை செயலாளர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் நீதிமன்ற அளிக்கும் உத்தரவினை முறையாக பின்பற்ற வேண்டும் என அரசு தரப்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அனைத்து அரசு அலுவலகங்களிலும் நீதிமன்ற வழக்குகள் தொடர்பாக உன்னிப்பாக கவனித்து வழக்கு விசாரணையின் போது அதிகாரிகள் கட்டாயம் ஆஜராகி உரிய விளக்கங்களை கொடுக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது. இந்த உத்தரவானது அரசு மூத்த வழக்கறிஞர்கள் கொடுத்த அறிவுறையின் படி செயல்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# நகைக் கடன் நிபந்தனை கண்டித்து தஞ்சையில் 30ம் தேதி திமுக ஆர்ப்பாட்டம்



சென்னை, மே.29

திமுக விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ். விஜயன் வெளியிட்ட அறிக்கை: ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதலே ஒன்றிய பாஜ அரசு கார்ப்ரேட் கம்பெனிகளுக்கு ஆதரவான கொள்கைகளையே அமல்படுத்தி, விவசாயிகள், தொழிலாளர்கள், ஏழை மக்களை மென்மேலும் பாதிக்கும் கொள்கைகளையே செயல்படுத்தி, சொல்லொணா துயரத்தில் ஆழ்த்தி வருகிறது.

தேசிய வங்கிகளில் சாமானிய மக்களுக்கும் விவசாயிகளுக்கும் கடன் வழங்காமல், பெரும் நிறுவனங்களுக்கு கடன்களை அள்ளி வழங்கி, பல லட்சம் கோடி ரூபாய் கடன்களை வாராக் கடன் என்று சொல்லி ஒன்றிய பாஜ அரசு தள்ளுபடி செய்கிறது. இனிமேல் வங்கிகளில் நகை கடன் பெற நகை வாங்கிய ரசீது அல்லது தகுந்த ஆவணம் தர வேண்டும். தனியாரிடம் வாங்கிய தங்க காசுகளுக்கு கடன் பெற முடியாது, ஏற்கனவே வாங்கிய நகை கடனை முழுமையாக செலுத்தியவர்களுக்கு மட்டுமே புதிய நகை கடன் வழங்கப்படும் போன்ற புதிய நிபந்தனைகளை விதித்து விவசாயிகள், தொழிலாளர்கள், ஏழை மக்களை வஞ்சித்து வரும் ஒன்றிய பாஜ அரசின் கைப்பாவையான இந்திய ரிசர்வ் வங்கி உத்தரவிட்டுள்ளது.

இந்த நிபந்தனைகளை உடனடியாக கைவிட வலியுறுத்தி திமுக விவசாய அணி மற்றும் அனைத்து விவசாய சங்கங்கள், காவிரி டெல்டா மாவட்டங்கள் இணைந்து வரும் 30ம் தேதி காலை 10 மணியளவில் தஞ்சாவூர், தலைமை தபால் நிலையம் எதிரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துகிறது. இதில் மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் நிர்வாகிகள் கழக விவசாய அணியினர் மற்றும் அனைத்து விவசாய சங்கங்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு தங்கள் கண்டனத்தை பதிவு செய்திட வேண்டும்.

இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

# தென்கொரியா பல்கலைகளில் செயல்முறை பயிற்சி பெற்று தமிழ்நாடு திரும்பிய மாணவர்கள் துணை முதல்வர் உதயநிதியுடன் சந்திப்பு



சென்னை, மே.29

'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் சிறந்த திறமையாளர்களுக்கு உதவித்தொகை வழங்கும் (ஸ்கவுட்) திட்டத்தின் கீழ் தென்கொரியா நாட்டின் பல்கலைக்கழகங்களில் உலகளாவிய செயல்முறை பயிற்சி பெற்று வந்த 6 மாணவ, மாணவிகள் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினை நேற்று தலைமை செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்கள்.

தமிழ்நாட்டின் பல்வேறு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை சேர்ந்த இயற்பியல் மற்றும் வேதியியல் பயின்று வரும் 2 மாணவர்கள் மற்றும் 2 மாணவிகளுக்கு தென்கொரியா நாட்டின் கச்சோன் பல்கலைக்கழகத்தின் பயோ – நானோ பயன்பாட்டு ஆராய்ச்சி மையத்தில், இந்த மாதம் 9ம் தேதி முதல் 24ம் தேதி வரை நானோ பொருட்களின் தொகுப்பு மற்றும் பண்புகளில் ஈடுபடும் நானோ பொருட்களின் உயிரி மருத்துவம் மற்றும் ஆற்றல் பயன்பாடுகள் தொடர்பான மேம்பட்ட ஆராய்ச்சி முறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டது.

மேலும், இயற்பியல் துறையை சேர்ந்த 2 மாணவர்களுக்கு தென்கொரியா நாட்டின் பூசன் தேசிய பல்கலைக் கழகத்தில் இந்த மாதம் 9ம் தேதி முதல் 24ம் தேதி வரை மேம்பட்ட நிலையான எரிசக்தி ஆய்வகத்தில் சூரிய மின்கல தொழில்நுட்பம் மற்றும் நிலையான எரிசக்தி கண்டுபிடிப்புகளை மையமாகக் கொண்ட பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த பயிற்சிகளின் காரணமாக பயிற்சி பெற்ற மாணவ, மாணவிகள் தென்கொரியா நாட்டின் கச்சோன் மற்றும் பூசன் பல்கலைக்கழகங்கள் அல்லது தென்கொரியா நாட்டின் பிற பல்கலைக்கழகங்களில் முதுகலை பட்டப்படிப்பைத் தொடர வாய்ப்பு வாய்ப்பு கிடைத்துள்ளது.

பயிற்சி பெற்ற மாணவ, மாணவிகளுடன் கலந்துரையாடிய துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் செயல்பாடுகள் குறித்தும், பயிற்சி பெற்றது குறித்தும் கேட்டறிந்தார். தமிழ்நாட்டில் இருந்து வந்திருப்பதாக தெரிவித்தபோது, தென்கொரிய பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்களும், மாணவர்களும் மிகுந்த மகிழ்ச்சியும், வரவேற்பும் அளித்தனர், இந்த வாய்ப்பினை வழங்கிய முதல்வருக்கு மாணவ, மாணவிகள் நன்றி என்று தெரிவித்தார்கள். இந்நிகழ்ச்சியில் சிறப்பு திட்ட செயலாக்க துறை செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழக மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நீதிமன்ற நடைமுறைகளை துஷ்பிரயோகம் செய்வதா? பொதுநல வழக்கை பழிவாங்கும் கருவியாக பயன்படுத்தக் கூடாது: ஐகோர்ட் கிளை எச்சரிக்கை



மதுரை, மே.29

திருச்சி மாவட்டம், முருங்கப்பட்டி முன்னாள் ஊராட்சி தலைவர் பெரியசாமி, ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த பொதுநல மனு: முருங்கப்பட்டியில் உள்ள தனியார் வெடிபொருள் நிறுவனத்தில் 2016, டிச.1ல் ஏற்பட்ட விபத்தில் 19 பேர் இறந்தனர். புகாரில் வழக்கு பதிந்து, உரிமம் ரத்து செய்யப்பட்டது. இதை எதிர்த்து அந்நிறுவனம் தரப்பில் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவில், அதிகாரி விசாரித்து உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட சில வழிகாட்டுதல்களை 2017ல் ஐகோர்ட் கிளை பிறப்பித்தது.

இதையடுத்து அந்நிறுவனத்திற்கு நிபந்தனையுடன் தடையில்லா சான்றை 2018ல் டிஆர்ஓ வழங்கினார். இதை ரத்து செய்ய வேண்டும். இவ்வாறு கூறியிருந்தார். இம்மனுவை விசாரித்த நீதிபதிகள் ஜெ.நிஷாபானு, எஸ்.ஸ்ரீமதி ஆகியோர் பிறப்பித்த உத்தரவு: இது ஒரு நேர்மையான பொதுநல வழக்கு அல்ல. மாறாக நீதிமன்ற நடைமுறைகளை துஷ்பிரயோகம் செய்வதாகும். பொதுநல வழக்கை தனிப்பட்ட பழிவாங்கும் நோக்கில் கருவியாக பயன்படுத்துவதை அனுமதிக்க முடியாது. டிஆர்ஓ உத்தரவில் தலையிட எந்த காரணத்தையும் காண முடியவில்லை. எனவே, இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. இவ்வாறு உத்தரவிட்டனர்.


# காங்கிரஸ் பெண் எம்எல்ஏ கைது



புதுக்கடை, மே.29

குமரி – கேரளாவை இணைக்கும் நான்கு வழிச்சாலை பணிக்காக குமரி மாவட்டத்தில் நிலம் கையகப்படுத்திய போது குன்னத்தூர் கிராம அலுவலகத்துக்குட்பட்ட காப்புக்காடு பகுதியை சேர்ந்த மக்களுக்கு போதிய இழப்பீடு வழங்கப்படவில்லை. இந்நிலையில் இழப்பீடு வழங்காமல் திடீரென்று மீண்டும் 4 வழிச்சாலை பணியை தொடங்க அதிகாரிகள் காப்புக்காடுக்கு வந்தனர். இதை அறிந்த விளவங்கோடு காங்கிரஸ் எம்எல்ஏ தாரகை கத்பர்ட் தலைமையில் மேற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் பினுலால்சிங் உள்ளிட்டோர் பாதிக்கப்பட்ட மக்களுடன் வந்து அதிகாரிகளை தடுத்து நிறுத்தினர். குளச்சல் போலீசார் வந்து பேச்சுவார்த்தை நடத்தியதில் உடன்பாடு ஏற்படாததை தொடர்ந்து எம்எல்ஏ உள்பட 9 பேரை போலீசார் கைது செய்தனர்.

# பொன்னேரி தொகுதியில் உள்ள கிராமங்களில் பேருந்து சேவை தொடங்க வலியுறுத்தல்



திருவள்ளூர், மே.29

பொன்னேரி தொகுதியில் உள்ள கிராமங்களில் புதிய வழித்தடங்களை ஏற்படுத்தி பேருந்து சேவை தொடங்க வலியுறுத்தல். அமைச்சர் சிவசங்கரிடம் பொன்னேரி தொகுதி எம்எல்ஏ துரை. சந்திரசேகர் கோரிக்கை மனு அளித்தார். பழவேற்காடு, கடப்பாக்கம், தத்தமஞ்சி, காட்டூர், மீஞ்சூர் வழித்தடத்தில் பேருந்து இயக்க கோரிக்கை வைத்தார்.

ஜூலைக்குள் புதிய பேருந்து சேவை தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் சிவசங்கர் உறுதியளித்துள்ளார்.

# ஜனநாயக கட்டமைப்புகளை மோடி அரசு சீர்குலைக்கிறது: செல்வப்பெருந்தகை குற்றச்சாட்டு



சென்னை, மே.29

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: ஆர்.எஸ்.எஸ். ஆதிக்கத்தில் இருக்கும், நரேந்திரமோடி தலைமையிலான அரசாங்கம், இந்தியாவின் முதல் பிரதமர் நேரு உருவாக்கிய ஜனநாயக அமைப்புகள் மற்றும் கட்டமைப்புகளை முற்றிலும் சீர்குலைக்கின்றன.

தேர்தல் ஆணையத்தின் நேர்மையும் செயல்பாடுகளும் சிக்கலுக்கு உட்பட்டுள்ளன. நீதிமன்றங்களுக்கு அழுத்தம் கொடுக்கப்படுகிறது. கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைப்புகளில் இந்துத்வா சிந்தனைகள் புகுத்தப்பட்டு, நேருவின் சாதனைகள் மறைக்கப்படுகின்றன. நேருவால் உருவாக்கப்பட்ட இந்தியாவை கட்டிக்காக்க அவரது நினைவு நாளில் உறுதியேற்போம்.

# நடத்தையில் சந்தேகப்பட்டதால் ஆத்திரம் ராணுவ வீரரை அடித்து கொன்றுவிட்டு விபத்து நாடகமாடிய மனைவி, மாமனார்: பைக்கில் உடலை எடுத்து சென்று கிணற்றில் வீசினர்



திருவண்ணாமலை, மே.29

ராணுவவீரரை மனைவி, மாமனார் அடித்துக் கொன்று விபத்தில் இறந்ததுபோல் நாடகமாடியதும், உடலை பைக்கில் எடுத்து சென்று கிணற்றில் வீசியதும் அம்பலமாகி உள்ளது. திருவண்ணாமலை மாவட்டம், கண்ணமங்கலம் அடுத்த ரஹிமான்பேட்டையை சேர்ந்தவர் ராஜேஷ்குமார் (34), ராணுவ வீரர். காஷ்மீர் பகுதியில் பணியில் இருந்தார்.

இவரது மனைவி சங்கீதா (32). இருவரும் காதலித்து திருமணம் செய்துள்ளனர். இவர்களுக்கு ஒரு மகள், ஒரு மகன் உள்ளனர். கணவர் ராணுவத்தில் பணிபுரிவதால் வீட்டில் தனியாக இருந்த சங்கீதா, வேலூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் நர்சாக பணியில் சேர்ந்தார். இதை ராஜேஷ்குமார் விரும்ப வில்லை. வேலைக்கு போக வேண்டாம் என்று மனைவியிடம் தொடர்ந்து கூறிவந்து ள்ளார். மேலும் மனைவியின் நடத்தையில் அவருக்கு சந்தேகம் இரு ந்ததாகவும் கூறப்படுகிறது. இந்நிலையில் ராஜேஷ்குமார் சில வாரங்களுக்கு முன்பு விடுமுறையில் ஊருக்கு வந்திருந்தார்.

கடந்த 13ம்தேதி இரவு சின்னஅய்யம்பாளையம் அருகே தேன்மலைப்பட்டியில் உள்ள விவசாய கிணற்றில் பைக்குடன் விழுந்து சடலமாக கிடந்தார். அவர் பைக்குடன் தவறி விழுந்து இறந்ததாக கூறப்பட்டது. இதையடுத்து கண்ணமங்கலம் போலீசார் வழக்குப்பதிந்து விசாரித்து வந்தனர். இந்நிலையில் மகனின் சாவில் சந்தேகம் இருப்பதாக ராணுவ வீரரின் தாய் சாந்தி புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் விசாரணை நடத்தினர். இதற்கிடையில் பிரேத பரிசோதனை அறிக்கையில் ராஜேஷ்குமார் அடித்து கொலை செய்யப்பட்டு பின்னர் கிணற்றில் வீசப்பட்டது தெரியவந்தது. அதன்பேரில் போலீசார் கிடுக்கிப்பிடி விசாரணை நடத்தினர்.

அதில் கடந்த 13ம்தேதி ராஜேஷ்குமாருக்கும் அவரது மனைவி சங்கீதாவுக்கும் இடையே குடும்ப தகராறு ஏற்பட்டுள்ளது. இதில் ராஜேஷ்குமாரை, சங்கீதா மற்றும் அவரது தாய், தந்தை, அண்ணன் உள்ளிட்டோர் கட்டையால் சரமாரி தாக்கியுள்ளனர். இதில் அவர் இறந்துள்ளார். பின்னர் சடலத்தை பைக்கில் கொண்டு சென்று கிணற்றில் வீசியதும் தெரியவந்தது.

இதுதொடர்பாக நாகநதி கிராமத்தை சேர்ந்த சங்கீதாவின் தந்தை ஏழுமலை, உறவினர்கள் கதிர்வேல், கிஷோர், ஜெயகுமார் மற்றும் கலையரசன் ஆகிய 5 பேரை நேற்றுமுன்தினம் போலீசார் கைது செய்தனர். ராணுவ வீரரின் மனைவி சங்கீதா, மாமியார் இந்திராணி, மைத்துனர் சதிஷ்குமார் ஆகிய 3 பேரைதேடிவருகின்றனர்.

கொலை குறித்து சங்கீதாவின் தந்தை ஏழுமலை அளித்த வாக்குமூலத்தில் மகள் சங்கீதாவுக்கும், மருமகன் ராஜேஷ்குமாருக்கும் இடையே அடிக்கடி குடும்ப பிரச்னை காரணமாக சண்டை ஏற்பட்டு வந்தது. ஒவ்வொரு முறையும் விடுமுறையில் வரும்போது தகராறு நடந்தது. இதனை நாங்கள் சமரசப்படுத்தி வந்தோம். இருப்பினும் பிரச்னை தொடர்ந்தது. இதேபோல் கடந்த 13ம்தேதி எங்கள் வீட்டுக்கு வந்து மனைவியிடம் ராஜேஷ்குமார் தகராறு செய்தார்.

அப்போது ஏற்பட்ட வாக்குவாதத்தில் ஆத்திரமடைந்து நானும், மனைவி இந்திராணி, மகள் சங்கீதா மற்றும் உறவினர்கள் சேர்ந்து ராஜேஷ்குமாரை கட்டையால் அடித்தோம். இதில் அவர் இறந்துவிட்டார். பின்னர் கொலையை மறைக்க பைக்கில் சடலத்தை எடுத்துச்சென்று தேன்பட்டி கிராமத்தில் உள்ள ராஜேஷ்குமாரின் விவசாய நிலத்தின் அருகே உள்ள கிணற்றில் பைக்குடன் வீசிவிட்டு விபத்து ஏற்பட்டு இறந்தது போல் அனைவரிடமும் கூறினோம் என்று தெரிவித்ததாக போலீசார் கூறினர்.

# ஒரே நாடு, ஒரே தேர்தல் சாத்தியமில்லாதது எதிர்காலத்தில் சர்வாதிகாரத்தை நோக்கி அழைத்து செல்லும்: திருநாவுக்கரசர் பேட்டி



சென்னை, மே.29

ஜவகர்லால் நேருவின் 61வது நினைவுதினத்தை முன்னிட்டு, சத்தியமூர்த்தி பவனில் நேற்று அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது படத்திற்கு தமிழக காங்கிரஸ் கட்சி முன்னாள் தலைவர்கள் தங்கபாலு, திருநாவுக்கரசர் ஆகியோர் தலைமையில் மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதில், மாநில துணை தலைவர்கள் சொர்ணா சேதுராமன், ஜி.கே.தாஸ், இமயாகக்கன், மாநில பொதுச் செயலாளர்கள் தளபதி பாஸ்கர், வக்கீல் டி.செல்வம், அருள் பெத்தையா, முன்னாள் கவுன்சிலர் தமிழ்ச்செல்வன், மயிலை அசோக் உட்பட பலர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

இதைத்தொடர்ந்து, திருநாவுக்கரசர் நிருபர்களிடம் கூறியதாவது: ஒரே நாடு, ஒரே தேர்தல் என்பது நடைமுறைக்கு சாத்தியமில்லாத ஒன்று. ஒரு மாநிலத்தில் ஆட்சி கவிழும் போது அதற்கு அடுத்து என்ன நிலை எடுப்பது போன்ற பல்வேறு சிக்கல்கள் உள்ளது.

எனவே, ஒரே நாடு, ஒரே தேர்தல் என்பது மாநில கட்சிகளின் உரிமைகளை பாதிக்கும் வகையில் அமையும். சர்வாதிகாரத்தை நோக்கி அழைத்துச்செல்கிற முடிவாக எதிர்காலத்தில் அமையக்கூடும். இவ்வாறு அவர் கூறினார்.

# ராட்சத ராட்டினத்தில் இயந்திர கோளாறு அந்தரத்தில் 3 மணி நேரமாக அலறியபடி தொங்கிய மக்கள்: கடுமையான போராட்டத்துக்கு பின் பத்திரமாக மீட்பு: ஈஞ்சம்பாக்கம் பொழுதுபோக்கு மையத்தில் பரபரப்பு



சென்னை, மே.29

ஈஞ்சம்பாக்கம் பொழுதுபோக்கு மையத்தில் ராட்சத ராட்டினத்தில் ஏற்பட்ட கோளாறால் 120 அடி உயரத்தில் 3 மணி நேரம் அந்தரத்தில் தொங்கிய மக்கள் கடும் முயற்சிக்கு பிறகு பத்திரமாக மீட்கப்பட்டனர். சென்னை அடுத்த கிழக்கு கடற்கரை சாலை ஈஞ்சம்பாக்கம் பகுதியில் விஜிபி பொழுதுபோக்கு மையம் உள்ளது. இதில் மேலும் கீழுமாக செல்லும் 'டாப் கன் ரைடு' என்ற ராட்சத ராட்டினம் உள்ளது. இந்த ராட்டினத்தில் மேல் வரிசையில் 15 பேர், கீழ் வரிசையில் 15 பேர் என மொத்தம் 30 பேர் பயணிக்க முடியும். நேற்று மாலை 8 சிறுவர்கள், 10 பெண்கள் உட்பட 30க்கும் மேற்பட்டோர் ராட்டினத்தில் ஏறினர். மாலை 7 மணியளவில் மேலே சென்ற ராட்டினம் தொழில்நுட்ப கோளாறால் அங்கேயே தடைபட்டு நின்றது. இதனால் 120 அடி உயரத்தில் 30 பேரும் அந்தரத்தில் சிக்கிக் கொண்டு கதறினர். இதை கீழேயிருந்து பார்த்துக்கொண்டிருந்த மக்களும் பீதியடைந்து கூச்சலிட்டனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

உடனடியாக, தொழில்நுட்ப கோளாறை சரிசெய்யும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டனர். 2 மணி நேரத்திற்கு மேலாக பொதுமக்கள் ராட்சத ராட்டினத்தில் அந்தரத்தில் தொங்கியபடி இருந்தனர். தொழில்நுட்ப கோளாறு சரியாகவில்லை. இதைத்தொடர்ந்து, போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து நீலாங்கரை போலீசாரும் துரைப்பாக்கம், கிண்டி, நீலாங்கரை தீயணைப்பு வீரர்களும் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்தவர்களுக்கு ராட்சத கிரேன் மூலம் பிஸ்கட், குளிர்பானம் உள்ளிட்டவை வழங்கப்பட்டன. தீயணைப்பு துறையின் ராட்சத ஏணி மூலம் 3 மணி நேரத்துக்கு பின் ராட்டினத்தில் இருந்தவர்கள் மீட்கப்பட்டனர். அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

29.5.2025

## அதிமுகவிடம் இருந்து தேமுதிகவுக்கு மாநிலங்களவை சீட் கிடைக்குமா? பிரேமலதா பேட்டி




சென்னை, மே.29

தேமுதிகவுக்கு மாநிலங்களவை சீட்டா என்பது குறித்து பொறுருத்திருந்து தான் பார்க்க வேண்டும் என்று பிரேமலதா விஜயகாந்த் கூறியுள்ளார். கடந்த நாடாளுமன்ற தேர்தலின் போது அதிமுக தலைமையிலான அணியில் தேமுதிக இடம் பெற்றது. அந்த தேர்தலில் தேமுதிகவுக்கு 5 இடங்கள் ஒதுக்கப்பட்டது. மேலும் ஒரு மாநிலங்களவை தொகுதியை அதிமுக தர சம்மதித்ததாக கட்சியின் பொதுச்செயலாளர் பிரேமலதா கூறி வந்தார். ராஜ்யசபா தேர்தலுக்கான நாள் வரும்போது, தேமுதிக சார்பாக யார் ராஜ்யசபா செல்ல உள்ளார்கள் என்பதை அதிகாரப்பூர்வமாக அறிவிப்போம் என்று கூறி வந்தார்.

இந்நிலையில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, மாநிலங்களவை உறுப்பினர் பற்றி நாங்கள் ஏதும் சொன்னோமா? யார், யாரோ சொல்வதை எல்லாம் கேட்க வேண்டாம் என்று தெரிவித்தார்.

இதனால், பிரேமலதா, எடப்பாடி மீது கடும் கோபத்தில் இருந்து வந்தார். இதனால், வர உள்ள தேர்தலில் அதிமுகவுடன், தேமுதிக கூட்டணி வைக்குமா என்பது கேள்விக்குறியாகி உள்ளது.

இந்நிலையில் தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா சென்னை கோயம்பேட்டில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நிருபர்களுக்கு பேட்டிளித்தார். அப்போது, அவர், ''தேமுதிகவுக்கு மாநிலங்களவை சீட் தரப்படும் என்று அதிமுக சொன்னது உண்மை தான். வெயிட் பண்ணுங்க. இப்போது தான் தேர்தல் தேதியை அறிவித்து இருக்கிறார்கள். டைம் இருக்கிறது. பார்ப்போம். எங்களுடைய மாநாடு ஜனவரி 9ம் தேதி நடக்க இருக்கிறது. அப்போது எங்களுடைய நிலைப்பாட்டை தெளிவுபடுத்துவோம்'' என்று கூறினார்.

## மக்களுக்கு தங்கு தடையின்றி சுத்தமான குடிநீர் கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டும்: பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன் வலியுறுத்தல்



சென்னை, மே.29

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் நேற்று வெளியிட்ட அறிக்கை: திருநெல்வேலி, தென்காசி மற்றும் விருதுநகர் ஆகிய தென் மாவட்டங்களுக்கு கூட்டு குடிநீர் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் குடிநீரானது மாசுபட்டிருப்பதாகவும், உறை கிணறுகளுக்கு பதிலாக தாமிரபரணி ஆற்றில் இருந்து நேரடியாக எடுக்கப்படும் குடிநீரால் மக்கள் அவதியுறுவதாகவும் வெளியாகியுள்ள செய்திகள் மிகுந்த மன வேதனையளிக்கின்றன.

கோடை வெயில் வாட்டி வதைக்கையில் சுத்தமான குடிநீருக்கு தட்டுப்பாடு நிலவுவது ஆபத்தானதல்லவா?. எனவே இதுகுறித்த உயர்மட்ட விசாரணையை உடனடியாக துவங்குவதோடு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் செயல்பாட்டையும் சீர் செய்து மக்களுக்கு சுத்தமான குடிநீர் தங்கு தடையின்றி கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டுமென தமிழக முதல்வரை வலியுறுத்துகிறேன். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

## இளைஞர்களை தொழில்முனைவோராக மாற்றும் புதிய சான்றிதழ் படிப்பு: தமிழக அரசு நிறுவனத்தில் சேர விண்ணப்பிக்கலாம்



சென்னை, மே.29

தமிழக அரசின் தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் சென்னை கிண்டி ஈக்காடுதாங்கலில் இயங்கி வருகிறது. இங்கு தொழில் முனைவு தொடர்பான பல்வேறு குறுகிய கால பயிற்சிகள் குறைந்த கட்டணத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. இந்நிறுவனம் அகமதாபாத் தொழில்முனைவோர் மேம்பாட்டு மற்றும் புத்தாக்க நிறுவனத்துடன் இணைந்து தொழில்முனைவோர் மற்றும் புத்தாக்கம் தொடர்பான புதிய சான்றிதழ் படிப்பை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக அந்நிறுவனத்தின் இயக்குநர் அம்பலவாணன் செய்தியாளர்களிடம் நேற்று கூறியதாவது: இந்த ஓராண்டு கால சான்றிதழ் பயிற்சியில் பட்டதாரிகள், டிப்ளமா முடித்தவர்கள் சேரலாம். மொத்தம் 2 செமஸ்டர்கள். தொழில்முனைவோராக விரும்பும் இளைஞர்களுக்கு இது அருமையான படிப்பு. வயது 21 முதல் 40க்குள் இருக்க வேண்டும். மொத்தம் 50 இடங்கள் உள்ளன. பயிற்சி கட்டணம் ரூ.80 ஆயிரம். இதற்கு பாரத ஸ்டேட் வங்கியில் கல்விக்கடன் பெற ஏற்பாடு செய்யப்படும். தொழில்நிறுவனங்களின் நிதியுதவி, சிஎஸ்ஆர் நிதி போன்றவற்றின் மூலம் படிப்பு கட்டணத்தை செலுத்தலாம்.

இன்றைய சூழலுக்கு ஏற்ற பாடத்திட்டம், நவீன வசதிகளுடன் கூடிய நூலகம், அனுபவம் வாய்ந்த பயிற்றுனர்கள், ஸ்மார்ட் கிளாஸ் வகுப்பறை, கள அனுபவம் உள்ளிட்டவை இப்படிப்பின் சிறப்பு அம்சங்கள் ஆகும். மாணவர்கள் மாணவர்கள் பல்வேறு மாநில அரசு நிறுவனங்களுக்கு சென்று தொழில்முனைவோருக்கு தேவையான வணிக திறன்களையும் அறிவையும் வளர்த்துக் கொள்ள முடியும்.

தயாரிப்பு யோசனையில் இருந்து வணிக பொருட்களை உற்பத்தியை மேற்கொள்வதற்கான தமிழக அரசு வழங்கும் ரூ.3 லட்சம் (வவுச்சர் – ஏ திட்டம்) மற்றும் ரூ.7 லட்சம் (வவுச்சர் பி திட்டம்) பெறுவதற்கு விண்ணப்பிக்கவும் ஏற்பாடு செய்யப்படும்.

அதோடு மாணவர்கள் டிஎன்சீட் நிதிக்கு விண்ணப்பிக்கவும் தேவையான உதவிகள் செய்துதரப்படும். மாணவர்கள் தொழில் தொடங்குவதற்கு தேவையான விரிவான திட்ட அறிக்கை (டிபிஆர்) தயாரிக்கவும் ஆலோசனை வழங்கப்புடும். இவ்வளவு சிறப்புகள் வாய்ந்த இந்த படிப்பில் சேர விரும்பும் இளைஞர்கள் https://editn.in/weboneyearRegistration என்ற இணையதள இணைப்பை பயன்படுத்தி ஜூலை 15ம் தேதி வரை ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

இப்படிப்பு ஜூலை மாதத்திலேயே தொடங்கப்படும். வெளியூர் இளைஞர்களுக்கு விடுதி வசதி இருக்கிறது. கூடுதல் விவரங்களை www.editn.in என்ற இணையதளத்தில் தெரிந்துகொள்ளலாம். அதோடு 8668101638, 8668107552 ஆகிய எண்களிலும் தொடர்புகொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார்.

## இன்றைய ராசி பலன்கள் (29.5.2025)

- **மேஷம்**: உற்சாகம் அதிகரிக்கும் நாள். புதிய யோசனைகள் தோன்றும். ஆனால், மன அழுத்தம் ஏற்படலாம்; அமைதியுடன் செயல்படுங்கள். குடும்பத்தில் ஆதரவு கிடைக்கும்.
- **ரிஷபம்**: பணியில் முன்னேற்றம் காண்பீர்கள். நிதி நிலை மேம்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.
- **மிதுனம்**: பொருளாதார ரீதியாக நல்ல நாள். வேலைவாய்ப்பில் முன்னேற்றம். மனதளவில்சற்றுகவலைஇருக்கலாம்; பொறுமையுடன் இருங்கள்.
- **கடகம்**: உடல்நலத்தில் கவனம் தேவை. வேலைப்பளுஅதிகரிக்கும்.வருமானம் உயரும். குடும்பத்தில் அமைதி நிலவும்.
- **சிம்மம்**: உள்ளுரம் குறைவால் ஆரோக்கியம் பாதிக்கப்படும். நண்பர்களின் உதவியால் நிதி பிரச்சினைகள் தீரும். குடும்பத்தில் மாற்றங்கள் ஏற்படும்.
- **கன்னி**: வேலை மற்றும் வியாபாரத்தில் முன்னேற்றம். மாணவர்கள் சாதனை படைக்கும். செலவுகளை கட்டுப்படுத்துங்கள்.
- **துலாம்**: வியாபாரத்தில் லாபம். கல்வியில் முன்னேற்றம். குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும்.
- **விருச்சிகம்**: குடும்பப் பிரச்சினைகள் தீரும். தம்பதிகளின் அன்பு பலப்படும். வியாபாரத்தில் லாபம் கிடைக்கும்.
- **தனுசு**: புகழ்ச்சி கிடைக்கும். காதல் கைகூடும். குடும்ப ஒற்றுமை ஏற்படும்.
- **மகரம்**: புதிய மனிதர்களை முழுமையாக நம்ப வேண்டாம். பண விஷயங்களில் கூடுதல் கவனம் தேவை. குடும்பத்தோடு குலதெய்வ வழிபாடு செய்வது நல்லது.
- **கும்பம்**: மன நிம்மதி கிடைக்கும். கடன் சுமை குறையும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.
- **மீனம்**: வேலை பளு அதிகமாக இருக்கும். உடல் சோர்வு ஏற்படும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.

## மோசமான வானிலை காரணமாக 2 முறை அந்தமான் சென்று தரையிறங்க முடியாமல் சென்னை திரும்பிய விமானம்: பயணிகள் கடும் அவதி




சென்னை, மே.29

சென்னையில் இருந்து 168 பயணிகளுடன், அந்தமான் சென்ற ஏர் இந்தியாஎக்ஸ்பிரஸ்பயணிகள்விமானம், அங்கு மோசமான வானிலை நிலவுவதால், அந்தமானில் தரையிறங்க முடியாமல், மீண்டும் சென்னைக்கு திரும்பியது.

சென்னையில் இருந்து மீண்டும் அந்தமான் புறப்பட்டுச் சென்ற அந்த விமானம், இரண்டாவது முறையாகவும், அங்குதரை இறங்க முடியாமல் நேற்றிரவு சென்னைக்கு திரும்பியது.


இதேபோல் சென்னையில் இருந்து அந்தமானுக்கு 154 பயணிகளுடன், புறப்பட்டுசென்றஇண்டிகோஏர்லைன்ஸ் பயணிகள் விமானம்,

அந்தமானில் தரை இறங்க முடியாமல், கொல்கத்தா விமான நிலையம் சென்று தரை இறங்கி உள்ளது. இதை அடுத்து அந்தமான் சுற்றுலா பயணிகள் 168 பேர், சென்னை விமான நிலையத்திலும், 154 பேர் கொல்கத்தா விமான நிலையத்திலும் தவித்துக் கொண்டு இருக்கின்றனர்.

ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் நிர்வாகம் கூறுகையில், ''பயணிகள் அனைவரும் விமான கட்டணத்தை திருப்பி பெற்றுக் கொண்டு, உங்கள் பயணத்தை ரத்து செய்து விடுங்கள்'' என்றனர்.

ஆனால் பயணிகள் தரப்பில், ''நாளை (இன்று) எங்களை விமானத்தில் அந்தமானுக்கு அழைத்து செல்லுங்கள். நீங்கள் பயண கட்டணம் திருப்பித் தர வேண்டாம்'' என்று கூறினர். ஆனால் விமான நிறுவனம் இதை ஏற்கவில்லை. இதனால் பயணிகள் மற்றும் விமான நிறுவனம அதிகாரிகள் இடையே வாக்குவாதம் நடந்தது.

## முதல் முறையாக குத்து பாடலுக்கு நடனமாடும் ராஷ்மிகா



தென்னிந்திய சினிமாவின் முன்னனி நடிகை ராஷ்மிகா மந்தனா. கடந்த 2016ம் ஆண்டு வெளியான "கிரிக் பார்ட்டி" என்றகன்னடதிரைப்படத்தின்மூலம்சினிமாவில்கதாநாயகியாக அறிமுகமானார். அதனைத்தொடர்ந்து, "கீதா கோவிந்தம்", "டியர் காம்ரேட்", "பீஷ்மா" உள்ளிட்டபடங்களில்நடித்துபிரபலமானார்.

இவரது நடிப்பில் சமீபத்தில் 'சிக்கந்தர்' படம் வெளியானது. ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் சல்மான் கானுடன் இணைந்து நடித்த இப்படம் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. இதையடுத்து பான் இந்தியா அளவில் ராஷ்மிகா மந்தனா பிரபலமாகியுள்ளார்.

இந்த நிலையில், பிரசாந்த் நீல் இயக்கத்தில் ஜூனியர் என்டிஆர் நாயகனாக நடித்து வரும் படம் 'டிராகன்' படத்தில் ஜூனியர் என்டிஆருடன் இணைந்து ஒரு சிறப்பு பாடலுக்கு ராஷ்மிகா மந்தனா நடனமாடப் போவதாக ஒரு தகவல் வெளியாகியிருக்கிறது. இதற்காக படக்குழு அவருடன் பேச்சுவார்த்தை நடத்திவருகிறது. ராஷ்மிகா மந்தனா இதுவரை எந்த படத்திலும் குத்து பாடலுக்கு நடனமாடியதில்லை என்பதாலும், அவரது பான் இந்தியா புகழ் காரணமாக இந்தப் பாடல் வெற்றி பெறும் என்பதாலும் பிரசாந்த் நீல் அவரை அணுகியதாக கூறப்படுகிறது.

## சசிகுமாரின் டூரிஸ்ட் பேமிலி பட ஓ.டி.டி ரிலீஸ்.. எப்போது தெரியுமா?




அயோத்தி, கருடன், நந்தன்' உள்ளிட்ட வெற்றிப்படங்களை அடுத்து சசிகுமார் தற்போது நடித்துள்ள படம் 'டூரிஸ்ட் பேமலி'. குட் நைட், லவ்வர் படங்களை தயாரித்த மில்லியன் டாலர் ஸ்டுடியோஸ் இப்படத்தை தயாரித்துள்ளது. அபிஷன் ஜீவிந்த் இயக்கும் இந்தப் படத்தில் சிம்ரன் கதாநாயகியாக நடித்துள்ளார். யோகி பாபு, எம்.எஸ்.பாஸ்கர், மிதுன் ஜெய்சங்கர், கமலேஷ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். கடந்த மே 1ந் தேதி வெளியான இப்படம் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. இலங்கை தமிழர்களான சசிகுமார் குடும்பம் அங்குள்ள பொருளாதார சூழல் காரணமாக தமிழகத்துக்குள் சட்டவிரோதமாக நுழைகின்றனர். அதன்பிறகு அவர்களின் வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களை நகைச்சுவையுடனும், எமோஷ்னலுடனும் படம் பதிவு செய்துள்ளது.

இப்படம் வெளியான முதல் நாளில் இருந்தே பாசிட்டிவான விமர்சனங்களை பெற்று நாளுக்கு நாள் வசூலையும் வாரி குவித்து வருகிறது. இந்த படத்திற்காக கூடுதல் திரையரங்குகளும் ஒதுக்கப்பட்டிருக்கும் நிலையில், இப்படம் 4வது வாரத்தில் வெற்றிநடைபோட்டு வருகிறது. குடும்பங்கள் கொண்டாடும் இப்படம் இன்றுவரையிலும் பல திரையரங்குகளில் ஹவுஸ்புல்லாக ஓடிக்கொண்டிருக்கிறது. சசிகுமார் மற்றும் சிம்ரன் நடிப்பில் வெளியான 'டூரிஸ்ட் பேமலி' திரைப்படம் ஜப்பானில் வெளியாகியுள்ளது. இத்திரைப்படம் இதுவரை உலகம் முழுவதும் ரூ.75 கோடி வசூல் செய்துள்ளதாக தயாரிப்பு நிறுவனம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. ரஜினிகாந்த், சிவகார்த்திகேயன், இயக்குநர் ராஜமவுலி, சூர்யா ஆகியோரை தொடர்ந்து நடிகர் நானியும் இந்தப் படத்தைப் பாராட்டியுள்ளார்.

'டூரிஸ்ட் பேமிலி' படம் வரும் ஜூன் 2ம் தேதி ஜியோ ஹாட்ஸ்டார் ஓடிடி தளத்தில் வெளியாகிறது.

## கியாரா அத்வானியின் பிகினி புகைப்படத்தை பகிர்ந்து சர்ச்சையில் சிக்கிய ராம் கோபால் வர்மா

இயக்குநர் ஷங்கர் இயக்கத்தில் ராம்சரண் நடிப்பில் உருவான 'கேம்சேஞ்சர்' படத்தில் கதாநாயகியாக நடித்தவர் கியாரா அத்வானி. இந்தி திரை உலகில் முன்னணி கதாநாயகிகளில் ஒருவராக இருக்கும் அவர், அயன்முகர்ஜி இயக்கில் உருவாகி உள்ள 'வார் 2' படத்தில் ஹிருதிக்ரோஷன், ஜூனியர் என்.டி.ஆருடன் இணைந்து நடிக்கிறார். ஜூனியர் என்.டி.ஆர் பிறந்தநாளையொட்டி இந்த படத்தின் டீசர் வெளியானது. அந்த டீசரில் இதுவரை இல்லாத அளவிற்கு கியாரா அத்வானி பிகினி உடையில் கவர்ச்சியாக தோற்றமளித்துள்ளார். டீசரை தனது சமூக வலைதளப்பக்கத்தில் பகிர்ந்த கியாரா அத்வானி, "இப்படத்தின் மூலம் எனக்கு முதன்முறையாக நடந்த பல விஷயங்கள் உண்டு. முதல் அதிரடி படத்தில் நடித்தது, ஹிருத்திக் ரோஷன், ஜூனியர் என்.டி,ஆருடன் முதன்முறையாக நடித்தது, முதல் முறையாக பிகினி உடையில் நடித்தது" என பதிவிட்டுள்ளார். இந்த நிலையில், கியாரா அத்வானியின் பிகினி புகைப்படத்தை இயக்குனர் ராம் கோபால் வர்மா தனது 'எக்ஸ்' வலைதள பக்கத்தில் பகிர்ந்திருந்தார். மேலும் அந்த பதிவில் கியாரா அத்வானி குறித்து ஆபாசமான கருத்தையும் அவர் பதிவிட்டதாக தெரிகிறது. இந்த பதிவு சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், ரசிகர்கள் மத்தியில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. பொதுவெளியில் இவ்வாறு நடந்து கொள்ளும் இவர், தனிப்பட்ட முறையில் எவ்வளவு மோசமானநபராக இருப்பார் என கடுமையாக விமர்சித்தனர். இதைத் தொடர்ந்து ராம் கோபால் வர்மா தனது பதிவை நீக்கினார். இருப்பினும் ரசிகர்கள் அவரை சமூக வலைதளங்களில் தொடர்ந்து விமர்சித்து வருகின்றனர்.

## ஸ்ரேயாஸ் ஐயரை தேர்வு செய்யாதது நல்லதுதான் இந்திய தேர்வுக்குழுவை பாராட்டிய பனேசர்




இந்திய கிரிக்கெட் அணி அடுத்த மாதம் (ஜூன்) முதல் இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இந்தியாஇங்கிலாந்து அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி ஜூன் 20 ந் தேதி லீட்சில் தொடங்குகிறது. இந்த தொடருக்கான 18 வீரர்கள் கொண்ட இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. அகர்கர் தலைமையிலான தேர்வு குழுவினர் அணியை தேர்வு செய்து அறிவித்தனர்.

இந்த மாதம் தொடக்கத்தில் டெஸ்ட் போட்டியில் இருந்து கேப்டன் ரோகித் சர்மா ஓய்வு பெற்றதால் அடுத்த கேப்டன் யார்? என்று அதிக எதிர்பார்ப்பு நிலவியது. இந்த நிலையில் எதிர்பார்த்தபடி சுப்மன் கில் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆனால் அந்த அணியில் சமீப காலமாக தொடர்ச்சியான பார்மில் அசத்தி வரும் ஸ்ரேயாஸ் ஐயருக்கு இடமளிக்காத இந்திய தேர்வுக்குழுவை பல முன்னாள் வீரர்கள் விமர்சித்தனர்.

இந்நிலையில் இங்கிலாந்து தொடரில் ஸ்ரேயாஸ் ஐயரை கழற்றி விட்டு இந்திய தேர்வுக்குழு சிறந்த முடிவை எடுத்துள்ளதாக அந்நாட்டின் முன்னாள் வீரர் மான்டி பனேசர் பாராட்டியுள்ளார்.

இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு: "இந்திய அணி நிர்வாகத்தினர் தந்திரத்தை தவற விடவில்லை என்று நான் நம்புகிறேன். ஸ்ரேயாஸ் மிகவும் சிறந்த வீரர். ஆனால் வேகம் மற்றும் ஸ்விங் ஆகக்கூடிய சூழ்நிலைகளில் அவர் தடுமாறக்கூடியவர் என்று நம்புகிறேன். அதற்கான நுட்பம் அவரிடம் இல்லை என்று நான் நினைக்கிறேன்.

அவருடைய சாதனைகள் சிறப்பாக உள்ளன. ஆனால் அது பிளாட்டான, சுழலுக்கு சாதகமான பிட்ச்களை கொண்ட சூழ்நிலைகளில் மட்டுமே நன்றாக இருக்கிறது. ஸ்ரேயாஸ் ஐயர் சூப்பர்ஸ்டார் என்று நினைக்கிறேன். ஆனால் வேகம் மற்றும் ஸ்விங் ஆகக்கூடிய சூழ்நிலைகள் என்று வரும் போது அதை சமாளிக்க அவரிடம் நுட்பம் இல்லை.

அவர் பந்தை வரவிட்டு விளையாடுவதில்லை. கைகளை வேகமாக நகர்த்தக்கூடிய அவருடைய கால்கள் அதிகம் நகர்வதில்லை. கண் ஒருங்கிணைப்பு சிறப்பாக இருக்கிறது. இது வேகம் மற்றும் பவுன்ஸ் ஆகக்கூடிய சூழ்நிலைகளுக்கு பொருந்தும். ஆனால் இங்கிலாந்து போன்ற ஸ்விங் ஆகக்கூடிய சூழ்நிலைகளுக்கு பொருந்துமா என்பது சந்தேகமாகும்" என்று கூறினார்

## அடுத்த ஐ.பி.எல். தொடருக்கு முன் இந்த 3 வீரர்களை அணிகள் விடுவிக்க வேண்டும் கும்ப்ளே




இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும், பஞ்சாப் கிங்ஸ் அணியின்முன்னாள்தலைமைபயிற்சியாளருமானஅனில்கும்ப்ளே, 2026ஐ.பி.எல்.மினிஏலத்திற்குமுன்னதாகஅணிகள்விடுவிக்கப்பட வேண்டும் என்று தான் கருதும் வீரர்களின் பெயர்களை வெளியிட்டுள்ளார்.

அதன்படி சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணியில் இடம்பெற்றுள்ள முகமது ஷமி, சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் இடம்பெற்றுள்ள ரவிச்சந்திரன்அஸ்வின்மற்றும்கொல்கத்தாநைட்ரைடர்ஸ்அணியில் இடம்பெற்றுள்ள வெங்கடேஷ் ஐயர் ஆகியோரை அந்தந்த அணி நிர்வாகங்கள் விடுவிக்க வேண்டும் என்று கூறியுள்ளார். இந்த 3 வீரர்களும் அணிகளின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யவில்லை என்று கூறியுள்ளார்.

மேலும் அடுத்த சீசனுக்கு முன் அணிகள் தக்கவைக்க வேண்டும் என்று தான் விரும்பும் வீரர்களையும் அவர் தேர்வு செய்துள்ளார்.

அதன்படி ரிஷப் பண்ட், மயங்க் யாதவ், (இருவரும் லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ்) ரவீந்திர ஜடேஜா (சென்னை சூப்பர் கிங்ஸ்), அஜிங்க்யா ரகானே (கொல்கத்தா நைட் ரைடர்ஸ்), நிதிஷ் குமார் ரெட்டி, இஷான் கிஷான் (இருவரும் சன்ரைசர்ஸ் ஐதராபாத்) மற்றும் துருவ் ஜூரெல் (ராஜஸ்தான் ராயல்ஸ்) போன்றவர்கள் அடுத்த சீசனில் அணிகள் தக்க வைத்துக் கொள்ளத் தகுதியானவர்கள் என்று கூறியுள்ளார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.